செ.வெ.எண்:970

**செய்தி வெளியீடு** **நாள் : 1.11.2010**

## ஒரே முறை தீர்வுத் திட்டம்
## தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகள் தீர்வு) சட்டம்,2010
## வரி நிலுவை தகுதி காலம் 31.3.2007–லிருந்து 31.05.2010 வரை நீட்டிப்பு

தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச்சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் வரி நிலுவைகளை தீர்வு செய்யும் வகையில் ஒரு ஒரே முறை தீர்வுத் திட்டம், 2010–2011 நிதிநிலை அறிக்கை கூட்டத்தில் அறிவித்தபடி, தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகள் தீர்வு) சட்டம், 2010 இயற்றப்பட்டு, 1.6.2010 முதல் 31.8.2010 வரை அமுலில் இருந்தது. பின்னர், பல்வேறு வணிக சங்கங்களின் பிரதிநிதிகளின் கோரிக்கைளை ஏற்று, இது மேலும் 31.12.2010 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 1.4.2007–க்கு முந்தைய காலத்திற்கு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959 மற்றும் மத்திய விற்பனை வரிச்சட்டம்,1956 ஆகியவற்றின் கீழ் வரிவிதிப்பு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, நிலுவையாக உள்ள கேட்பு இனங்களை தீர்வு செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டிருந்தது. தற்போது, 31.5.2010 வரை வரி நிலுவையிலுள்ள இனங்களுக்கும் மேற்படி திட்டத்தின் கீழ் தீர்வு செய்வதற்கு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை வணிகர்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் முழுமையாகப் பயன்படுத்தி நிலுவைகளை தீர்வு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

.....................................................................

வெளியீடு – முதன்மை செயலர்/வணிகவரி ஆணையர்.

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

Additional Commissioner (P. R.)
O/o. Principal Secretary / Commissioner
of Commercial Taxes,
Chepauk, Chennai - 600 005.